## இரண்டு நித்திய இடங்கள்

**இயேசு சொன்னார்:** "இடுக்கமான வாசல் வழியாய் (பரலோக) உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் (நரகம்) விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்". (மத்.7:13-14).

ஒருநாள் நீங்கள் சென்றடையவேண்டிய இடம் பரலோகமாய் இருக்கவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அப்படியானால் நீங்கள் இப்பொழுது பிரயாணத்துக் கொண்டிருக்கும் வழி பரலோகத்திற்குதான் உங்களை வழி நடத்துகிறதா என்று ஆராய்ந்து பாருங்கள்.

***தயவுசெய்து நித்தியத்தை அடையாளப்படுத்தும் கீழ்க்காணும் கேள்விகளுக்குப் பதில் அளியுங்கள்***

1. உங்களுக்கு இயேசு கிறிஸ்து யாராய் இருக்கிறார் ?
2. நீங்கள் மரித்தப் பிறகு என்ன நடக்குமென நினைத்துண்டா ?
3. பரலோகமும் நரகமும் உண்டென நம்புகிறீர்களா ? உண்டெனில் நீங்கள் செல்லும் இடம் எது ? ஏன் ?
4. நீங்கள் பரலோகத்திற்குதான் செல்லுவீர்கள் என்று எப்படி அறிவீர்கள் ?

## தேவனுடைய பதில்கள்

### நாமெல்லாரும் பாவம் செய்திருக்கிறோம்

ரோமர். 3:23 "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானோம்".

தேவனுடைய சுபாவத்திற்கு எதிராய் இருக்கிற எந்த ஒரு கிரியையும், வார்த்தையும், சிந்தனையும் பாவத்துடன் தொடர்புடையதாய் இருக்கிறது. இதில் நாம் நினைக்கிறதைக் காட்டிலும் அதிகமாக தேவனுடைய கட்டளையை உடைத்திருக்கிறோம் (யாக். 2:10). ஆகையால் நம்முடைய பரிசுத்த தேவனுக்கு முன்பாக நாம் குற்றவாளிகளாய்க் காணப்படுகிறோம் (ரோமர்.3:10-12).

### பாவம் நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது

ரோமர்.6.23 "பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்".

பாவம் ஒரு கொள்ளை நோயைப் போல் செயல்பட்டு அதன் விளைவாக ஆவிக்குரிய ரீதியில் தேவனிடமிருந்து நம்மை பிரிக்கிறது. ஆனால் நற்செய்தி என்னவென்றால், இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நாம் மன்னிக்கப்பட்டு நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாகிறோம்.

## கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்தார்

ரோமர். 5:8 "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்". இயேசு கிறிஸ்து எதற்காக வந்தார் ?.

### இயேசு எதற்காக வந்தார் ?

தேவன் நம்மேல் வைத்த வியப்பான அன்பினால், சிலுவையில் மரிக்கவேண்டிய நம்முடைய இடத்தில் இயேசு அந்த தண்டனையை தன்மீது ஏற்றுக்கொண்டதினாலேயே அந்த தகுதிக்குள்ளானவர்கள் ஆனோம். மூன்று நளைக்குப் பிறகு இயேசு உயிர்த்தெழுந்து, தான் தேவன் என்பதை வெளிப்படுத்தினார் (யோவா.2:18-20, யோவா.11:25,26).

### தேவனிடத்தில் சேருவதற்கு இயேசுவே வழி

யோவா.14:6 இல் இயேசு, "நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". என்று சொன்னார்.

### நித்தியத்திற்கான மூன்று படிநிலைகள்

**மனந்திரும்புதல்**
மனந்திரும்புதலென்பது, நான் பாவம் செய்தேன், இப்பொழுது பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனிடம் திரும்ப விரும்புகிறேன் என அறிக்கை செய்யவேண்டும். அப்.3:19 இல் சொல்லப்பட்டுள்ளதுபோல, "உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்".

**விசுவாசம்**
'இயேசு கிறிஸ்துவே தேவன்' என்று விசுவாசத்தோடு அறிக்கை செய்யவேண்டும். ரோமர்.10:9இல், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று சொல்லுகிறது.

**ஏற்றுக்கொள்ளுதல்**
நாம் அங்கிகாரத்தோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றவேண்டும். யோவான்.1:19 "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்".

மனந்திரும்புதல் + விசுவாசம் + ஏற்றுக்கொள்ளுதல் = தேவனுடைய பிள்ளைகளாகிறோம்.

## நித்திய ஜீவன் என்கிற வெகுமதியை விசுவாசத்தின் மூலம் பெறுகிறோம்

எபேசியர்.2:8-9 "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலே உண்டானதல்ல".

நாம் எவ்வளவு மதம் சார்ந்த நபராய் இருந்தாலும், நற்கிரியைகள் பல செய்தாலும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளமுடியாது.

இந்த நித்திய ஜீவனை தேவன் நமக்கு ஈவாய் கொடுக்கிறார். இயேசு கிறிஸ்துவின்மேல் நம்முடைய முழுமையான விசுவாசத்தை வைக்கும்போது, இந்த இலவசமான ஈவைப் பெறுகிறோம்.

தனிப்பட்ட முறையில் இயேசுவை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

வெளி.3:20 "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்த்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்".

## அர்ப்பணிப்புக்கான கேள்விகள்

இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகரென்றும், தேவனென்றும் அறிக்கையிட்டு அர்ப்பணித்து வாழ்வதே கிறிஸ்தவனாவதற்கான அடையாளமாகும். எனவே இந்த முக்கியமான தீர்மானத்தை நீங்கள் எடுப்பதற்கு முன், கீழ்க்கண்ட கேள்விகளுக்கு நீங்களே விடையளித்துப்பாருங்கள்.

1. தேவனோடு ஒரு தனிப்பட்ட உறவைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறீர்களா ?
2. உங்களுடைய எல்லா பாவங்களுக்காகவும் மன்னிப்பைப் பெறவேண்டுமென்று விரும்புகிறீர்களா ?
3. இயேசுவே தேவனென்றும், நீங்கள் மரிக்கவேண்டிய இடத்தில் உங்களுக்காக அவர் சிலுவையில் மரித்தாரென்றும், பின்பு உயிரோடு எழுந்தாரென்றும் விசுவாசிக்கிறீர்களா ?
4. இப்பொழுதே உங்களுடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறீர்களா ?

## ஜெபத்தின் மூலம் எப்படி இயேசுவை ஏற்றுக்கொள்வது

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அந்த இலவசமான நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று விரும்புவீர்களானால், கீழே ஆலோசனையாகக் கொடுக்கப்பட்டுள்ள ஜெபத்தை உண்மையாகவும், தேவனிடத்தில் வைக்கும் விசுவாசத்தோடும் ஜெபியுங்கள்.

*பரலோக பிதாவே, நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்தேன். என்னுடைய எல்லா பாவங்களுக்காகவும் மன்னிப்பைப் பெற விரும்புகிறேன். இயேசு எனக்காகச் சிலுவையில் மரித்து உயிர்த்து எழுந்தாரென்று விசுவாசிக்கிறேன். பிதாவே என் ஜீவியத்தை உம்முடைய சித்தத்தைச் செய்யும்படி ஒப்புக்கொடுக்கிறேன். இயேசு கிறிஸ்து என் ஜீவியத்திலும் என் இருதயத்திலும் வரவேண்டுமென்று விரும்புகிறேன். இயேசுவின் நாமத்திலே இதை ஏறெடுக்கிறேன். ஆமென்.*

## இப்பொழுது என்ன நடந்தது ?

### இயேசு உங்கள் வாழ்க்கையில் வந்துவிட்டார்

வெளிப்படுத்தல் விசேஷம் 3:20 இன்படி, இயேசு வாக்கத்தத்தம் செய்ததுபோலவே உங்கள் வாழ்க்கையில் அவர் வருவார்.

### இப்பொழுது இலவசமான ஈவாகிய அந்த நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டீர்கள்

1.யோவான்5:11-13, இயேசுவை ஏற்றுக்கொள்கிற யாவரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என வாக்குத்தத்தம் செய்கிறது.

“தேவன் நமக்கு நித்திய ஜீவனை தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன். தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும் தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்”.

## கிறிஸ்துவில் வளர

1. தினந்தோறும் வேதம் வாசியுங்கள்
2. யோவான் எழுதின சுவிசேஷத்திலிருந்து ஆரம்பியுங்கள்
3. அனுதினம் ஜெபத்தில் தேவனோடு பேசுங்கள்
4. கிறிஸ்துவைப் பற்றிய உங்கள் தீர்மானத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்
5. கிறிஸ்துவை மைய்யமாக கொண்ட சபையைத் தெரிந்துகொள்ளுங்கள்
6. உங்கள் விசுவாசத்தை ஞானஸ்நானம் பெறுவதின்மூலம் வெளிப்படுத்துங்கள்.

மேலும் தெரிந்துகொள்ள :

Y-Jesus.com இயேசுவைப் பற்றின ஆதாரங்களுக்காக

Jesusonline.com கிறிஸ்தவனின் வளர்ச்சிக்காகவும் தரவுகளுக்காகவும்

→ இயேசு கடவுளா ?

→இயேசு மரணத்திலிருந்து உயிர்தெழுந்தாரா ?

→ தற்காலத்திற்கு இயேசு பொருந்துவாரா ?

# நித்தியமான பதில்கள்

## வாழ்க்கைகான மிக முக்கியமான கேள்விகள்